செய்தி வெளியீடு எண்: 358 நாள் : 03.07.2013

03.07.2013 அன்று மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு கே.ஏ ஜெயபால் அவர்கள், கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசுச் செயலர் முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., மற்றும் திரு ச. முனியநாதன் இ.ஆ.ப..ஆகியோர் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்திற்கு சென்னை, தேனாம்பேட்டையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன் விற்பனை நிலையப் பணிகளை ஆய்வு செய்தனர். அதன் பின்னர் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் ரூ.15.25 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ள மீன்வளத் துறையின் இயக்குநர் அலுவலக கூட்ட அரங்கினை திறந்து வைத்தார்.

பின்னர் மீன்வளத்துறை அமைச்சர் மற்றும் அரசு செயலர் அவர்கள் தலைமையில் மீன்துறை இயக்குநர் முன்னிலையில் நடைபெற்ற மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தில் மீன்வளத் துறையின் மீன்பிடித் துறைமுக திட்டங்கள் வட்ட முதன்மை பொறியாளர், தலைமையலுவலக மீன்துறை இணை இயக்குநர்கள், மீன்துறை துணை இயக்குநர்கள் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர்கள் கலந்துகொண்டனர். ஆய்வுக் கூட்டத்தில் துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

மீன்வளத்துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கிய திட்டங்களான மீனவர்களுக்கு மீன்பிடித் தடைக்கால நிவாரணம் வழங்குதல், மீன்பிடிப்புக் குறைந்த காலத்திற்கான நிவாரணம் வழங்குதல், மீன்பிடி படகுகளை இணையதளம் மூலம் பதிவு செய்தல், மீனவர்களுக்கு கைரேகை பதியப்பட்ட அடையாள அட்டைகள் வழங்குதல் மற்றும் இதர மீனவர் நலத்திட்டங்களுடன் நீர்தேக்க மீனவள மேலாண்மை, நீர்வள நிலவள திட்டப்பணிகள் , தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டப்பணிகள், தேசிய மீனவள மேம்பபாட்டு வாரிய திட்ட பணிகள் மற்றும் மேற்குதொடர்ச்சிமலை மேம்பாட்டு திட்டப்பணிகள் குறித்து ஆய்வு செய்து மக்கள் நலத்திட்டங்கள் விரைவில் மக்களைச் சென்றடைய ஆலோசனைகள் வழங்கினர்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் மீன்துறை அலுவலர்களான மண்டல மீன்துறை இணை இயக்குநர்கள், மீன்துறை துணை இயக்குநர்கள் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9